லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச தொடர்புகளுக்கும், உபாய ஆய்வுகளுக்குமான நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 32 ஆம் இலக்க தந்திரோபாய வழிகள் கற்கை தொடர்பான இலங்கை நிறுவக அதிகாரச்சட்டத்தால் திருத்தப்பட்ட 2000 இன் 45 ஆம் இலக்க தந்திரோபாய வழிகள் கற்கை தொடர்பான இலங்கை நிறுவக அதிகாரச்சட்டத்தின் 10(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுக் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச தொடர்புகளுக்கும், உபாய ஆய்வுகளுக்குமான நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

**இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் மூலம் ஆதனங்கள், பொறிகள், மற்றும் உபகரணங்களில் (Sundry items) பெறுமானத்தேய்வு செய்யும் கொள்கை வெளிப்படுத்தப்படவில்லை.

(ஆ) நியமத்தின் 65 ஆவது பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பயன்தரு ஆயட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 905,150 கிரயமான கணனி உபகரணங்கள் முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீள்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கை

மூலதன மானியங்களைப் பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் வருடாந்தம் காலக்கழிவு செய்வதற்குப் பதிலாக முழுமையான மானியமான ரூபா 4,944,768 தொகை நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அந்த மானியத்தில் ரூபா 157,000 தொகை வருமானச் செலவினங்களைச் செய்வதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

#### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் கணிப்பீட்டின் பிரகாரம் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான நிறுவகத்தின் பங்களிப்பு ரூபா 1,517,117 ஆக இருந்த போதிலும், ரூபா 1,503,927 ஆக நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டமையின் காரணமாக, ரூபா 13,190 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்து பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 905,150 கிரயமான கணனி உபகரணங்களுக்காக மீளாய்வாண்டிற்காக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டமையின் காரணமாக அந்த நிதிக்கூற்றுக்களில் கணனி உபகரணங்களின் பெறுமதி ரூபா 226,288 குறைத்தும், வருடாந்த பெறுமானத்தேய்வு அப்பெறுமானத்தால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 8,557,029 தொகையான அட்டுறு செலவின மீதியில் உள்ளடங்கியுள்ள 2011 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 6,744,288 தொகை மற்றும் 2014 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற உபசரிப்புச் செலவினம் ரூபா 62,000 தொகை மற்றும் கணக்காய்வுக் கட்டணம் ரூபா 150,000 தொகை என்பன மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணக்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2008 சனவரி 01 ஆந் திகதிய 1530/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் திருத்தப்பட்ட 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 10 ஆம் பிரிவு | நிறுவகத்தினால் ஊழியர்களின் சம்பளம் ரூபா 25,000 தொகை அல்லது அதற்கு மேலாக அதிகரிக்கின்ற விடத்து ரூபா 25 முத்திரைக் கட்டணமொன்று அறிவிட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கதிர்காமர் நிறுவகத்தின் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறுமதி ரூபா 16,080,355 ஆன நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

# 3. நிதி மீளாய்வு

## 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 446,290 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 7,797,868 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 8,244,158 வீழ்ச்சி காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மொத்த வருமானம் ரூபா 7,043,746 இனால் அதிகரித்திருந்த போதிலும், வழங்கல் மற்றும் நுகர்வுப் பொருள் செலவினம் ரூபா 8,005,415 இனாலும், ஊழியர் செலவினம் ரூபா 5,202,199 இனாலும், ஏனைய செலவினம் ரூபா 1,837,473 இனாலும் அதிகரித்தமை வீழ்ச்சிக்கான பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் கடந்த நான்கு வருடங்களின் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 1,691,957 தொகையான மிகை 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக அதிகரித்து 2017 ஆம் ஆண்டின் போது, ரூபா 3,311,380 பற்றாக்குறைக்கு உட்பட்டிருந்தது. எனினும், நிதி விளைவில் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைச் சீராக்கியதன் பின்னர் 2013 ஆம் ஆண்டில் ரூபா 12,436,454 தொகையான பங்களிப்பு 2016 ஆம் ஆண்டளவில் ரூபா 23,903,845 தொகை வரை தொடர்ச்சியான அதிகரிப்பைக் காண்பித்த போதிலும், 2017 ஆம் ஆண்டின் போது அது ரூபா 11,733,482 தொகை வரை வீழச்சியடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

நிறுவகத்தின் தந்திரோபாய வழித் திட்டத்தில் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்குரிய வருடாந்த செயலாற்றல் குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருந்த போதிம், ஒவ்வொரு குறிகாட்டியின் கீழும் அடையப்பட வேண்டிய பௌதீக இலக்கு குறிப்பாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 செயற்படு நிலையும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பௌதீக செயலாற்றல் இலக்கு காணப்படாமையின் காரணமாக நிறுவகத்தினால் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட தந்திரோபாய வழிக் கற்கைகள் மற்றும் 15 சர்வதேச தொடர்பு தொடர்பான கலந்துரையாடல்களும் விரிவுரைகளும், 06 மாநாடுகள் மற்றும் விடயப் பரப்பிற்கு கொண்டுவரப்பட்ட விடயங்களுக்குரியதாக பிரசுரிக்கப்பட்ட பருவகால சஞ்சிகைகள் மற்றும் 37 கடிதங்கள் என்பவற்றின் போதியளவான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக பண்டாரநாயக்க தூதுவர் பயிற்சி நிறுவனத்தினால் இராஜதந்திரிகள் மற்றும் உலக தகவல் தொடர்பான டிப்ளோமா மற்றும் பட்டப் பின் படிப்பு டிப்ளோமா பாடநெறியும், ஏனைய நாடுகளிலிருந்து அழைப்பு விடுக்கப்பட்ட இராஜதந்திர உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிநாட்டு சேவையின் உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய அரச சேவையின் உத்தியோகத்தர்களுக்காக 03 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும், அமைச்சின் சட்ட உத்தியோகத்தர்களுக்காக வினைத் திறமைகாண் தடைப்பரீட்சையும் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) லக்ஸ்மன் கதிர்காமர் நிறுவகத்தில் 2017 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வின் பிரகாரம் 15 பொருள் அலகுகளில் பற்றாக்குறையும், 24 பொருள் அலகுகளில் மிகையும் காணப்பட்டமை தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தில் நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒலித்தெறிப்பு இயந்திரம் (Sound System) வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளுதல் நிறுவகத்தின் முறையாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் போதும் 14 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக வாடகை அடிப்படையில் அந்த உபகரணங்களை பெற்றுக் கொள்வதற்காக கூட்டுமொத்தமாக ரூபா 834,500 செலவிடப்பட்டிருந்தது. உரிய உபகரணத் தொகுதியொன்றை நிறுவகம் கொள்வனவு செய்யாமையின் காரணமாக இவ்வாறான செலவினத்தை நிரந்தரமாகச் செய்வதை தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.3 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் நிறுவகத்தால் 17 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 10,211,509 தொகை படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2018 யூலை 18 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க முகாமைத்து சேவைகள் சுற்றறிக்கையின் (1) ஆம் பந்தியின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை விஞ்சி ஆட்சேர்க்கப்பட்டுள்ள ஊழியர் எண்ணிக்கை தொடர்பான விபரம் மற்றும் சம்பள மற்றும் ஆளணி எண்ணிக்கை தொடர்பான ஆணைக்குழுவின் சிபாரிசு மற்றும் பொதுத் திறைசேரியின் முன் அங்கீகாரம் என்பன இன்றி ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்ட சம்பளம் மற்றும் படிகளை அதிகரித்தல் தொடர்பான விபரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 07 தாமதங்கள் தாமதித்து 2018 ஒக்தோபர் மற்றும் 02 ஆந் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 5.2 கணக்காய்வுக் குழு

மீளாய்வாண்டின் போது வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் 03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன் அந்தக் கூட்டத்திற்காக நிறுவகம் மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச தூதுவர் பயிற்சி நிறுவனம் பங்குபற்றச் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 5.3 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்

### 5.3.1 பெறுகைகள்

(அ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் (ஈ) இன் பிரகாரம் நிறுவகம் மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச தூதுவர் பயிற்சி நிறுவகத்தால் மீளாய்வாண்டிற்குரிய பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட 1,790,551 தொகையான பெறுகைகள் தொடர்பாக 2006 இன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.11.3, 6.2.2 மற்றும் 8.12.3 இன் பிரகாரம் கேள்வி அழைப்பிற்காக பதிலளித்தலுக்காக கேள்விதாரர்களுக்கு போதியளவான காலம் வழங்கப்படாமை, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசு பெறப்படாமை மற்றும் கிடைத்த பொருள் மாதிரிகளின் பிரகாரம் காணப்பட்டமையை தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் உறுதிப்படுத்தப்படாமை போன்ற புறக்கணிப்புக்கள் அவதானிக்கப்பட்டன.

## 5.4 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் 2007 ஆம் ஆண்டு முதல் ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.5 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச தொடர்புகளுக்கும் உபாய ஆய்வுகளுக்குமான நிறுவகத்தை தாபித்தல் தொடர்பாக 2006 பெப்ரவரி 23 ஆந் திகதிய அமப/06/0202/214/003 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் (அ) பிரிவின் பிரகாரம் அரசாங்கத்தின் காணிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை அமுல்படுத்துவதன் மூலம் கொழும்பு 07 இல் ஹோட்டன் பிரதேச 24 ஆம் இலக்க இடத்தில் அமைந்துள்ள ஆதனங்களின் உரிமைகளை நிறுவகத்திற்கு கையேற்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த ஆதனங்களை கையேற்பதற்கு கணக்காய்வுத் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன் மண்டபம் மற்றும் பூங்காக்களை ஒதுக்குதல் மற்றும் இரத்துச் செய்தல் முறைமையொன்று தயாரிக்கப்படாமையின் காரணமாக மண்டபம் மற்றும் பூங்காவை வாடகைக்கு வழங்குதல் தொடர்பாக விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.